**திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் பொட்டப்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் / செயல் அலுவலர்**

**அவர்களின் நடவடிக்கைகள்**

ந.க.எண்: 1/2024/SWP/UMIZ2VYS/2024/POTTAPALAYAM VILLAGE PANCHAYAT RD நாள்: 25-04-2024

பொருள்: மனைப்பிரிவு – மதுரை நகர் ஊரமைப்பு அலுவலகம் – மதுரை உள்ளூர் திட்டக் குழும பகுதி – சிவகங்கை மாவட்டம் – திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் – பொட்டப்பாளையம் – பொட்டப்பாளையம் கிராமம் – சர்வே எண். 12/1C3, 12/4, 43/1C, 43/2, 43/4 & 44/1A ல் அமையும் (4.06 ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரப்பெற்றது – இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்: 255 ஊரக வளர்ச்சி (C2) த். துறை நாள்: 18.08.1997.
2. அரசாணை (நிலை) எண்: 71 ஊரக வளர்ச்சி (C2) த் துறை நாள்: 16.03.2003.
3. அரசாணை (நிலை) எண்: 78 விட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3) த்துறை) நாள்: 04-05-2017.
4. அரசாணை (நிலை) எண்: 172 விட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3) த்துறை) நாள்: 13-10-2017.
5. மனுதாரர் திரு.S.கேசவன் & R.தாமோதரன், டோர்எண்: 137/73, மீனாட்சி அவன்யூ, காமராஜர் ரோடு முனிச்சாலை மதுரை தெற்கு மதுரை அவர்களின் விண்ணப்பம் கடிதம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள்.17-04-2024. ஆன்லைன் ந.க.எண். UMIZ2VYS: 31-03-2024
6. உறுப்பினர் செயளர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் ஆன்லைன் ந.க.எண். 25765/2024/SWP/UMIZ2VYS/2024/TCP: நாள்:17.04.2024
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள், TANGEDCO உபயோகம் மற்றும் உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திர ஆவணம்.
8. மனுதாரர் திரு.S.கேசவன் & R.தாமோதரன், டோர்எண்: 137/73, மீனாட்சி அவன்யூ, காமராஜர் ரோடு முனிச்சாலை மதுரை தெற்கு மதுரை என்பவரின் கூராய்வுக் கட்டணம் மற்றும் அங்கீகாரக் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது.

Scanned with OKEN Scanner

உத்தரவு:

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பொட்டப்பாளையம், பொட்டப்பாளையம் கிராமம் – சர்வே எண். 12/1C3, 12/4, 43/1C, 43/2, 43/4 & 44/1A ல். அமையும் (4.06 ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் மூலம் ம.வ.தி.அ/ம.உ.தி.கு.எண்:–98/2024 தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்டஅனுமதி எண்.109/2024 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1. உள்ளாட்சி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு பரப்பு பொட்டப்பாளையம் ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்து கொடுக்கப்பட்டது.

2. பார்வை(8)ல் காணும் மனுதாரர் கூராய்வுக் கட்டணமாக (மட்டும்) ரூ.5000 மற்றும் அங்கீகாரக் கட்டணமாக ரூ.286735. மட்டும் நாள்:25.04.2024 செலுத்தியுள்ளார்.

3. மேற்காணும் மனைப்பிரிவினை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து இறுதி ஒப்புதல் வழங்கி இதன்மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது.

## நிபந்தனைகள்

1. அரசாணைகளுக்கு உட்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு கட்டுப்பட்டு இந்த தற்காலிக உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

2. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நிலஉரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின் படி மனைப்பிரிவு வரைப்படம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்துகொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம். நில உரிமை குறித்து முடிவு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

3. மனைப்பிரிவின் மனை அளவுகள், புல எண்கள் மற்றும் உத்தேச சாலை அமைப்புகள் ஆகியவற்றை தலைவர் / செயல் அலுவலர் ஆய்வின் போது காட்டப்பட்டதில் மாற்றம் ஏதும் இருப்பின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ன் படி தங்கள் மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

Scanned with OKEN Scanner

4. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச்சட்டம் மற்றும் நில சீர்த்திருத்தசட்டங்களின் கீழ் கவரப்படவில்லை என தங்களால் உறுதி மொழி சான்று வழங்கப்பட வேண்டும்.

5. கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மனையின் பரப்பளவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் பரப்பளவு இருப்பது பின்னர் தெரியவந்தால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ன் படி தங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

6. அரசாணை (நிலை)எண்: 172, விட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 13-10-2017–ல் விதி எண்: 7(g)(ii) – ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) அனைத்தும் பத்திரப்பதிவு துறையில் தலைவர் 7 செயல் அலுவலர் நிலையூர் – 1 வது பிட் ஊராட்சி என உள்ளாட்சியின் அபிவிருத்திக்கு பதிவு செய்து தரவேண்டும்.

7. பெறப்பட்ட ஆவணங்களின்படி தயார் செய்யப்பட்ட வரைப்படத்திற்கு உள்ளாட்சி விதிகளின் படி உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

8. இந்த அனுமதி மனைகளுக்கு மட்டுமே பொருந்தும், மனையில் அமையும் கட்டிடங்களுக்கு அனுமதியாகக் கருதப்பட மாட்டாது.

9. மனைப்பிரிவிற்குள் அமையும் தெருக்கள் அனைத்திற்கும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி 47(11) ன் படி மனைப்பிரிவில் தேவைப்படும் சாலை, குடிநீர் வசதி, வடிகால் வசதி, கழிவுநீர் வசதி, மற்றும் மின்சார வசதிகளை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து கொள்ள வேண்டும். உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் மதிப்பீடு செய்யப்படும் செலவுத்தொகையினை மனுதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிரத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டது கண்டறியப்பட்டால் திட்ட அனுமதி இரத்து செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையால் உரிய சட்டரீதியான நடவடிக்கை தங்கள் மீது எடுக்கப்படும்.

11. கட்டிடத்தை சுற்றியுள்ள காலியிடத்தில் மரக்கன்றுகள் நடப்பட வேண்டும்.

12. மேற்கண்ட நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் இவ்வுத்தரவு எப்பொழுது வேண்டுமானாலும் இரத்து செய்யப்படும்.

Scanned with OKEN Scanner

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பொட்டப்பாளையம் ஊராட்சி பொட்டப்பாளையம் கிராமம் சர்வே எண்: 12/1C3, 12/4, 43/1C, 43/2, 43/4 & 44/1A ல் அமையும் (4.06 ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு பொட்டப்பாளையம் ஊராட்சி மூலம் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

P. குடலந்தி 25-4-24

தலைவர் செயல் அலுவலர்,
பொட்டப்பாளையம் ஊராட்சி,
திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம்

25/4/24

பெறுநர்
திரு.S.கேசவன் & R.தாமோதரன்,
டோர்எண்: 137/73, மீனாட்சி அவன்யூ,
காமராஜர் ரோடு முனிச்சாலை,
மதுரை தெற்கு, மதுரை

நகல்:
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம்
அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner